# வடந்தை

துகளில்லாத புது உலகம் தோன்றல் வேண்டும் என்போம்

காலம் - 04 | தை - சித்திரை | காற்று - 09




NEW UTHAYAN PUBLICATIONS
JAFFNA
SRI LANKA
361 KASTHURIYAR ROAD
2011/06/04
18
810-083
0078
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வெளியீடு :**

பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வடமாகாணம்
தொலைபேசி இல : 0213202990

**ஆலோசகர் :**

திரு. இ. இளங்கோவன்
செயலாளர்
கல்வி அமைச்சு
வடமாகாணம்

**முகவரி :**

பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வலயக் கல்வி அலுவலகம்
வடமாகாணம்.
யாழ்ப்பாணம்

**ஆசிரியர் குழு :**

திருமதி. என்.ஸ்ரீதேவி
திரு.வி.குணபாலா

**கணணி வடிவமைப்பும் அச்சும் :**

அஸ்ரா பிரிண்டர்ஸ் (பிரைவேட்) லிமிடட்
0777 426 175

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளர்


# நுழைவாயில்

பிறந்துள்ள புதிய ஆண்டில்
வடந்தையின் முதலாவது காலாண்டு
இதழில் தங்களை சந்திப்பதில்
மகிழ்ச்சியடைகின்றோம்.

இதுவரை காலமும்
திருகோணமலையில்
இயங்கி வந்த வடமாகாண
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம்
யாழ்ப்பாணத்தில் தனது
செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது.

தை மாதம் தொடக்கம்
சித்திரை மாதம்
வரையான நான்கு மாத காலத்தில்
திணைக்களத்தினதும்,
கலாசார உத்தியோகத்தர்களினதும்
செயற்பாடுகளை இப் பருவ இதழில்
ஆவணப்படுத்தியுள்ளோம்.

வடந்தை தொடர்பான
கருத்துக்களையும்,
ஆலோசனைகளையும்
தங்களிடமிருந்து
எதிர்பார்க்கின்றோம்.
இனிய தமிழ் சிங்கள புத்தாண்டு
நல் வாழ்த்துக்களுடன்
அடுத்த பருவ இதழில்
சந்திப்போம்......

ஆசிரியர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச பெண்கள் தினம்.



உலகெங்கும் பெண்களின் சம உரிமைக் காகவும் பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்திற்காகவும் சர்வதேச பெண்கள் தினம் கொண்டா டப்பட்டு வருகின்றது. இத் தினத்தை முன்னிட்டு 2011.03.08 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாண பண்பாட்டலு வல்கள் திணைக்களமும், யாழ்ப்பாண மாநகர சபையும் இணைந்து சர்வதேச பெண்கள் தினத்தை கொண்டாடின.



இதில் கருத்தாடல் நாடகம், நடனம், இசையரங்கு, கோலாட்டம் போன்ற பல நிகழ்வுகள் இடம்பெற்றன. யாழ். மாநகர சபை முதல்வர் தலைமையில் நடாத்தப்பட்ட இந் நிகழ்விற்கு ஏராளமான பெண்கள் அமைப்பினரும், அதிகாரிகளும் கலந்து நிகழ்வை சிறப்பித்தனர்.





# கலை நிகழ்வு.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கலை நிகழ்வில் யாழ். இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெற்றிருந்தது. இந் நிகழ்விற்கு இலங்கை ஜனாதிபதி அதிமேதகு. மகிந்த ராஜபக்ஷ அவர்கள், வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்கள் ஆகியோர் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கௌரவ ஆளுநர் விருது-2011

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், தம் வாழ்நாளில் கலைக்கும், தமிழுக்கும் சிறப்பாக பணியாற்றிய கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக வருடா வருடம் வழங்கப்படும் உயர் விருதான "கௌரவ ஆளுநர் விருது- 2011" ற்குரிய கலைஞர்களைத் தேர்வு செய்வதற்காக வடமாகாணத்தின் பிரதேச செயலகங்களில் இருந்து கலைக்கும், தமிழுக்கும், சமூகத்திற்கும் சிறப்பாக பணியாற்றிய 60 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்களின் பெயர் விபரங்களை, பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் மூலம் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. கலைஞரின் சுயவிபர விடயங்களுடன், புகைப்படத்தையும் இணைத்து 2011.04.30ம் திகதிக்கு முன்னர் திணைக்களத்திற்கு கிடைக்க கூடியதாக அனுப்பி வைப்பதற்குரிய அறிவுறுத்தல்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# Hon. Governors Award 2011

Department of Cultural Affairs, NP honor is to the artists who has contributed for arts and Tamil language by presenting "Hon Governors Award". The artists eligible for the Award will be selected by the panel of experts.

# மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களுக்கான முதலாம் ஆண்டு கலந்துரையாடல்

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களுக்கான 1ம் காலாண்டு கலந்துரையாடல் 2011.03.10ம் திகதி வடமாகாண கல்வி அமைச்சின், செயலாளர் திரு.இ.இளங்கோவன் அவர்கள் தலைமையில் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி.என்.ஸ்ரீதேவி, பிரதம கணக்காளர் திரு.இராஜேந்திரன், திட்மிடல் பிரதிப் பணிப்பாளர் திரு.வரதராஜன், நிதிஉதவியாளர் திரு.யூட் ராஜசிங்கம், மற்றும் திணைக்கள அலுவலர்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இக் கலந்துரையாடலில் 2011ம் ஆண்டு வடமாகாணத்தில் மாவட்ட ரீதியாக செயற்படுத்தப்படவுள்ள செயற்திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. செயற்பாடுகளுக்குத் தேவையான பௌதீகவளங்கள், நிதி வளங்கள் தொடர்பாகவும் அவற்றை பெறும் பொறிமுறைகள் பற்றியும் ஆராயப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய விழா – 2010
# ஆய்வரங்கக் கட்டுரைகள்.

கடந்த 2010.10.02ம் திகதி தொடக்கம் 2010.10.05ம் திகதி வரை கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற வடமாகாண தமிழ் இலக்கிய விழாவின் ஒரு பகுதியான "ஈழத்து தமிழ் இலக்கியமும் பெண்களும்" என்ற தலைப்பில் நடாத்தப்பட்ட ஆய்வரங்கத்தில் ஆய்வாளர்களால் வாசிக்கப்பட்ட ஆய்வரங்கக் கட்டுரையினை, இவ்வாண்டு தமிழ் இலக்கிய விழாவில் நூல் வடிவில் வெளியிட பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

எனவே ஆய்வாளர்கள் தங்கள் கட்டுரையினை செம்மைப்படுத்தி நூலுருவாக்கத்திற்கு ஏற்ற வகையில் எதிர்வரும் 2011.04.30ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக

பணிப்பாளர்<br>
பண்பாட்டலுவல்கள்திணைக்களம்<br>
கல்வி அமைச்சு வடமாகாணம்<br>
வலயக் கல்வித் திணைக்களம்<br>
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

# பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் விசேட பஜனை நிகழ்வு.

இன்றைய இளைய சமூகத்தவர்களிடையே சமய நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களை சமூகத்தின் நற்பிரஜைகளாக வளர்த்தெடுக்கும் நோக்கில் காரைநகர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பஜனை நிகழ்வு 2011.04.17ம் திகதி மாலை ஞாயிற்றுக் கிழமை மாலை 04.30 மணிக்கு நடைபெற்றது.

இதில் காரைநகர் வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை மாணவர்கள் மற்றும் பக்த அடியார்கள் பலரும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.இந் நிகழ்வை காரைநகர் பிரதேச கலாசார நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ஒழுங்குபடுத்தி நடாத்தினார்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்தின் மகுடம்-2011 கண்காட்சி.



இலங்கையின் சுதந்திரதினத்தை முன்னிட்டு வருடா வருடம் நடாத்தப்படும் "தேசத்தின் மகுடம்" கண்காட்சி இவ் வருடம் மொனரா கலை மாவட்டத்தின் புத்தல என்ற பிரதேசத் தில் 2011.02.04ம் திகதி தொடக்கம் 2011.02.10ம் திகதி வரை, சுமார் 07 நாட்கள் காலை 09.00 மணி தொடக்கம் நள்ளிரவு 12.00 மணிவரை நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெற்றன.

இலங்கையின் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் செயற்பாடுகளையும் அவற்றின் சேவை, மற்றும் உற்பத்தி களையும் வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வா கக் காணப்பட்ட இக் கண்காட்சியில், வட மாகாணமும் தனது பண்பாட்டு விழுமியங் களை பிரதிபலிக்கும் பாரம்பரிய பொருட் கள். மற்றும் திணைக்கள செயற்பாடு களை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் என்பனவற்றை காட்சிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அமைச்சுக்கள், திணைக்களங்கள் தமது சேவை தொடர் பான கையேடுகளையும், ஒலி, ஒளி நாடாக்களையும் வெளியிட்டிருந்தன.



மிகச் சிறப்பான முறையில் வடமாகாண மக்களது பண்பாட்டு விடயங் களையும், மண்வாசனையையும் எடுத்துக் காட்டுவதாக வரவேற்பு வளைவு அமைக்கப் பட்டிருந்தது. பல மாகாணங்களில் இருந்தும் தேர்ச்சி பெற்ற கலைஞர்களின் கலை நிகழ்வு களும் இடம் பெற்றிருந்தது. இக்கண்காட்சி யை ஏராளமான பொதுமக்கள், மற்றும் பாட சாலை மாணவர்கள், வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பார்வையிட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.



## DAYATA KIRULLA 2011 EXHIBITION

An exhibition was held for the celebration of the Independence Day at Buttle Predeshiya In Moneragela District for 7 days. The Honorable Governor had visited the pavilion and appreciated our stall exhibition showing traditional objects of our culture for the Northern Province. Many artists from our province had presented their cultural program.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலர்ந்தது புது வசந்தம்~ 2011.



வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், வவுனியா. மன்னார், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 250 கலைஞர்கள் பங்குபற்றிய, ''புலர்ந்தது புதுவசந்தம்'' என்னும் கலைச் சங்கம நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் 2011.02.22ம் 23ம் திகதிகளில் இடம் பெற்றது.

இந்நிகழ்வுக்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் கௌரவ கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களும், வடமாகாண கௌரவ ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அவர்களும் மற்றும் வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட அரச அதிபர்கள் திணைக்கள அதிகாரிகளுடன் அரங்கு நிறைந்த கலை ரசிகர்களும் கலந்து கொண்டனர்.





இந் நிகழ்வில் வாத்திய பிருந்தா, நாட்டியாஞ்சலி, விநாயகர் துதி, மல்லாரி, உயிரின் ஓசை, வசந்த உதன கிரியா, புதியதோர் உலகம் செய்வோம், அசோக. வசந்தஉற்சவம், தேவலோகத்தில், சாஸ்திரிய நடனம், மலர்ந்தன மலர்கள், கைகோர்ப்போம் வணங்கி நிற்போம், மல்லாரி போன்ற 15 இயல், இசை நாடக நிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## Dawn of new Vasantham



The above program was held on 22nd and 23 of February 2011 at Veerasingham hall . About 250 artists from Jaffna, Vavuniya, Mannar and Killinochchi had participated for this events. The Honorable Governor of Northern Province who was honored as the chief guest for this program and the Honorable minister Dogules Devenanda also had graced the events of various culture program were performed.

The Honorable Governor had provided fund for this program

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சிறந்த நூற்பரிசுத் தேர்வுப் போட்டி - 2010.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வருடா வருடம் வடமாகாண எழுத்தாளர்களை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டு மேற்படி போட்டிகளை நடாத்தி வருகின்றது. இப் போட்டிக்கான நிபந்தனைகள் பின்வருமாறு.

01. நூல்கள் யாவும் 2010 ஜனவரி 01ம் திகதிக்கும் முதல் 2010 டிசம்பர் 31ம் திகதிக்கும் இடையில் அச்சில் வெளிவந்தவையாகவும், முதல் பதிப்பாகவும் இருத்தல் வேண்டும்.

02. நூலாசிரியர் வடமாகாணத்தின் 05 மாவட்டங்களில் ஒன்றினை பிறப்பிடமாக கொண்டவராக இருத்தல் வேண்டும். (யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி )

03. ஒருவர் எல்லாத்துறை போட்டிகளிலும் பங்குபற்றலாம். நூலின் ஆசிரியர் ஒருவராக மட்டும் இருத்தல் வேண்டும்.

04. நூலின் 04 பிரதிகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும் .

05. பின்வரும் துறைகளில், போட்டிகள் இடம்பெறும். நூலாசிரியர் தான் எந்தப் பிரிவில் தனது ஆக்கத்தை சேர்த்துக் கொள்ள விரும்புகின்றார் என்பதை கட்டாயம் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

1. உயர்கல்வி
2. ஆய்வும் விமர்சனமும்,
3. பல்துறை,
4. கவிதை,
5. சிறுகதை
6. நாவல்,
7. நாடகம்,
8. சிறுவர் இலக்கியம்

06. நூல்கள் தமிழ் மொழி மூலம் ஆக்கப்பட்டிருப்பதுடன் நூலில் பதிப்பித்த ஆண்டும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

07. நூல்களை பதிவுத் தபாலின் மூலமாகவோ அல்லது வலயக் கல்விப் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ நேரடியாக ஒப்படைக்கலாம்..

08. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

09. விண்ணப்ப முடிவுத்திகதி 2011.05.23ம் ஆகும். இத் திகதிக்கு முன்னர் கிடைக்ககூடியதாக

பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வலயக் கல்வித் திணைக்களம்
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் நூற்பிரதிகள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது.

.மேலதிக விபரங்களுக்கு 021-3202990 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்
கல்வி அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Selection of best book Publication for Award 2010

The Department of cultural Northern Province Conducts a Competition annually to Motivate Writers in Northern Province. The Conditions for the Competition are as Follows.

01. The books should have been Published as 1st edition with in 2010 Jan 01 and 2010 Dec 31.
02. The writes must have been in one of the five districts of Northern Province.
03. One can compete in all categories and must be the sole writer.
04. 4 copies of the books have to be submitted to the Department of Culture
05. The writer must indicate to which area he/she competes.

    1. Higher Education
    2. Research and
    3. Multiple sector
    4. Prose
    5. Short stores
    6. Novels
    7. Drama
    8. Children literature

06. The books are in Tamil and the year of Publication should be indicated
07. The books could be send by post or handed over at Zonal Education office, Jaffna.
08. The decision of the panel of judges is final.
09. Please send the application to reach the office before 2011.05.23 to the Following Address.

Director,
Department officer,
Zonal Education Officer,
Jaffna.


Late applications will not be considered. Please feel free to contact 0213202990 for further details.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் விசேட பஜனை நிகழ்வு.




இளைய சமூகத்தவர்கயிடையே நற்பழக்க வழக்கங்களை ஏற்படுத்தி, அவர்களை நல் வழிப்படுத்தும் நோக்கில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரது அறிவுறுத்தலுக்கு அமைவாக, வடமாகாணத்தில் உள்ள சகல மாவட்டங்களிலும் மாதாந்த பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஆலயங்களில் விசேட பஜனை நிகழ்வினை ஒழுங்கு செய்து நடாத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.



ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பிரதேச செயலகங்கள் தோறும் மாதம் இரண்டு ஆலயங்களில் பௌர்ணமி தினத்திலோ அல்லது அதற்கு முன்னரோ, பின்னரோ வரும் வெள்ளிக் கிழமைகளில் பஜனை நிகழ்வினை ஒழுங்கு படுத்துவதுடன், பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மாதத்திற்கு 03 பாடசாலைகள் வீதம் பங்குபற்றுவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவுறுத்தல் சகல மாவட்ட மற்றும் பிரதேச கலாசார உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.



இதன் முதற்கட்டமாக மேற்படி பஜனை நிகழ்வு நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கோண்டாவில் மேற்கு மகா கணபதிப்பிள்ளையார் கோவிலில் 2011.04.19ம் திகதி மாலை 03.00 மணியளவில் நல்லூர் பிரதேச செயலாளர் திரு.ப. செந்தில் நந்தனன் அவர்களது தலைமையில் நடை பெற்றது.



நிகழ்வின் ஆரம்ப உரையினை, மகா கணபதிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் ஆலய போஷகர் திருமதி. வ. சோமசூரிய சிங்கம் அவர்களும், சிறப்புரையை வடமாகாண பண்பாட்டலு வல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி அவர்களும் ஆற்றினர். இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட சின்மயாமிஷன் வதிவிட துறவி பிரம்மசாரி ஜாக்ரட் சைத்தன்ய சுவாமிகள் விசேட பஜனை நிகழ்வினையும் நடாத்தி னார்கள். ஏராளமான பாடசாலை மாணவர்களும், பக்தர்களும் கலந்து கொண்டு இந் நிகழ்வை சிறப்பித்தனர். நல்லூர் பிரதேச கலாசார உத்தியோ கத்தர் திருமதி. கு.ரஜனி அவர்களின் நன்றியுரையுடன் இப் பஜனை நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.

பண்பாட்டலுவல்கள் திணைக்களம் முன்னெடுத்துள்ள பல்வேறு நிகழ்வு களில் இப் பஜனை நிகழ்வு இன்றைய காலத்திற்கு மிக அவசியமானது என்று குறிப்பிட்ட சுவாமிகள் எல்லா ஆலயங்களிலும் இவ்வாறான பஜனை நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும் என்றும், அதற்குத் தன்னாலான ஆதரவு கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

## Special bhajan on Poya days

To cultivate religious believe among young generation and to provide friendship ,a special Bhajan was organized under the performance of Mr. P. Senthilnathan Divisional Secretary Nallur at Kondavil West Maha Kanapathy Kovil on 2011. 04.19. and this bhajan will be conducted by us in various temple in all division in future.

## மகா சிவராத்திரி தின நிகழ்வு.

இந்துக்கள், தம் வாழ் நாளின் மிக முக்கியமான சிறப்புத் தினங்களில் ஒன்றாக, மகா சிவராத்திரி தினத்தை கொண்டாடி வருகின்றனர். இப் புனித தினத்தை முன்னிட்டு, வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் விசேட நிகழ்வுகளை ஒழுங்கு செய்திருந்தது.

திரு.நா.தர்மராஜா (அகளங்கன்) அவர்களின் சொற்பொழிவு, திரு. சிவஞானசேகரத்தின் பண்ணிசை ஆகிய நிகழ்வுகள் என்பனவற்றை (ஈழத்தின்) தேவார பாடல் பெற்ற திருத்தலமாகிய மன்னார் மாதோட் டத்தில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை வேள்வி - 2011



வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களம், வடமாகாண இசையியலாளர்களை ஊக்குவித்து அவர்களின் திறனை வெளிப் படுத்த ஒரு களம் அமைத்துக் கொடுக்கும் நோக்கமாக, "இசை வேள்வி-2011" என்ற நிகழ்வை நடாத்துவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந் நிகழ்வு தொடர்பான ஆரம்பக் கலந்து ரையாடல் வடமாகாண கௌரவ ஆளுநர் தலைமையில் 2011.03.22ம் திகதி வியாழக்கிழமை காலை 09.00 மணிக்கு கௌரவ ஆளுநர் அவர்களது யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெற்றது.



இதில், பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர். மாவட்டக் கலாசார உத்தியோ கத்தர்கள், இயல், இசைக் கலைஞர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகி யோர் பங்குகொண்டு தம் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கினர். சுமார் 250 இசையியலாளர்களை இந் நிகழ்வில் பங்குபற்ற வைப்பதுடன், இவ் வருடம் மே மாதத்தில்



இந் நிகழ்வை நடாத்துவதற்கும், ஏகமான தாகத் தீர்மானிக்கப்பட்டது. இந் நிகழ்வு தொடர்பான செயற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்காக 2011.04.05ம்திகதி காலை 09.00 மணிக்கு வடமாகாண கலாசார உத்தியோகத்தர்களுடன் சந்திப்பு ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டு, நடைபெற்றது. இந் நிகழ்வு தொடர்பாக ஒத்திகை நிகழ்வுகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 2011.04.22ம், 23ம் திகதிகளில் நடைபெற்றன.



## MUSIC FESTIVAL-2011

To bring out the talents of the musicians of Northern Province the "MUSIC FESTIVAL 2011" will be staged shortly in Jaffna. A preliminary discussion was held under the patronage of the Honorable Governor of Northern [illegible] Director of Cultural Affairs, the musicians, Artists, and all dignitaries had participated and contributed their constructive suggestions. Rehearsals are in progress and the events are scheduled to be held on 20th of May 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org